**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**
**O.S.No. 415/2022**

28.10.2025 வா.சா.1 திரு. பேச்சிமுத்து

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. தம்புரான் சாமிகள் உடைய ஜீவசமாதி எத்தனை வருடங்களாக உள்ளது என்றால் முள்ளு செடிக்குள் மறைவாக இருந்ததால் எனக்கு எத்தனை வருடங்களாக இருந்தது என்று தெரியாது. சுமார் 150 ஆண்டுகளுக்கு முன்பாகவே மேற்படி ஜீவ சமாதி உள்ளது என்றும் நான் வழக்கிற்காக தெரியாது என சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராதில் தபசில் சொத்து விவரத்தில் சர்வே எண். 1096/7 என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். சர்வே எண். 1096/7ல் எத்தனை செண்ட் என்றும் அதன் நான்கு மால் விவரங்களையும் குறிப்பிட்டு பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான்.
2. சர்வே எண். 1096/7ல் எத்தனை செண்ட் என்று எனக்கு தெரியுமா என்றால் மொத்தம் 2 ஏக்கருக்கு மேல் இருக்கும். நான் கடை நடத்தி வருவதாக சொல்லும் தாவா இடம் தென்வடல் எத்தனை அடி இருக்கும் என்றால் 7 அடி இருக்கும். கிழமேல் எத்தனை அடி இருக்கும் என்றால் சுமார் 10 அடிக்குள் இருக்கும். மொத்தம் 70 சதுர அடி தான் எனது கடை என்று சொன்னால் சரிதான்.
3. சர்வே எண். 1096/7 என்பது 28.5 செண்ட் என்று வருவாய் துறையில் இருந்து 12.07.2025 ஆம் தேதி குறிப்பிட்டு உதவி கோட்ட பொறியாளர், நெடுஞ்சாலை துறைக்கு கடிதம் கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. 20.06.2008ம் தேதியிட்ட கடிதத்தில், இந்து அறநிலைய துறையில் இருந்து இணை ஆணையாளர் மேற்படி இடம் பிரதிவாதிக்கு சொந்தமானது என குறிப்பிட்டுள்ளார் என்றால் அவ்வாறு எதுவும் குறிப்பிடவில்லை.

4. தாவா இடமான 70 சதுர அடியை நான் சட்டப்பூர்வமாக அனுபவித்து வருவதற்கு எந்தவிதமான ஆவணத்தையும் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். சர்வே எண். 1096/7 க்கு முன்னால் நெஞ்சாலை துறைக்கு பாத்தியப்பட்ட சாலை அமைந்துள்ள சர்வே எண். 547/1 தான் உள்ளது வேறு யாருக்கும் பாத்தியப்பட்ட இடம் இடையில் இல்லை என்றால் சரியல்ல. நான் மேற்படி இரு சர்வே எண்ணிற்கு இடையில் எனக்கு பாத்தியப்பட்ட இடம் உள்ளது என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது கடைக்குள்ள ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன்.
5. இந்த வழக்கில் சர்வே எண். 1096/7 க்குரிய பட்டா எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் இல்லை. பட்டா மாநகராட்சியில் இருந்து கொடுக்க மாட்டார்கள். கடை வைப்பதற்கு உத்தரவு நகல் தான் கொடுப்பார்கள். கடை வைப்பதற்கான உத்தரவு நகலை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் நான் உத்தரவு எதையும் தாக்கல் செய்யவில்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
6. தாவா சொத்து பிரதிவாதியின் சொத்தான 1096/7 சர்வே எண்ணிற்கு முகப்பு சொத்தாகும் என்றால் இல்லை. தாவா சொத்தில் சட்டப்பூர்வாக குடியிருக்கவில்லை என்றும் ஆக்கிரமிப்பாளராக ஆக்கிரமிப்பு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் பிராதில் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கது இல்லை என்றால் சரியல்ல. நான்கு பக்க எல்கைகள் குறிப்பிடாமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கு நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.
7. நான் அரசியல் கட்சியுடைய முக்கிய மன்ற செயலாளராக உள்ளதால் பிரதிவாதிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து இருக்கிறீர்கள் என்றும் அதனால் தான் தாவா சொத்திற்கு எந்தவிதமான ஆவணங்களும்

என் பெயரில் என்னிடம் இல்லை என்றால் சரியல்ல. நான் வழக்கில் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 28.10.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.28 14:06:29 +0530

Principal District Munsif,
Tirunelveli.